தி இந்து



▲ பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 70-வது சுதந்திர தின விழா, வேலம்மாள் கல்வி அறக்கட்டளை தொடங்கப்பட்ட 30-வது ஆண்டு விழா மற்றும் வேலம்மாள் இன்டர்நேஷனல் பள்ளியின் 13-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டன. தேசியக் கொடியை ஏற்றிவைத்து, பள்ளி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள வேலம்மாள் சிலையை வேலம்மாள் கல்விக் குழுமங்களின் நிறுவனத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி எப்.எம். இப்ராகிம் கலிபுல்லா, சிபிஎஸ்சி சென்னை மண்டல துணை செயலர் கே.சீனிவாசன், வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் சிஇஓ எம்.வி.எம்.வேல்முருகன், தாளாளர் எம்.வி.எம்.வேல்மோகன், இயக்குநர் எம்.வி.எம். சசிகுமார், வேலம்மாள் பள்ளி முதல்வர் கே.கோதண்டராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.